# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஜனவரி 2018

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **மார்ச் 14, 2018**

வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) பெறுமதிகளுக்கமைய, 2016 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2018 ஜனவரி மாதத்திற்கான உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் 4.3% இனால் அதிகரித்துள்ளதென திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ஏ.ஜே. சதரசிங்க இந்தச் சுட்டெண்னை வெளியீடு செய்யும் உத்தியோகபூர்வ வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஜனவரி மற்றும் 2017 ஜனவரி மாதங்களில் முறையே 108.9 மற்றும் 104.4 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கு அரசினைப் போன்று கைத்தொழில் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்கமைவாக தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையினை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மூலம் அடையாளம் காணமுடியும்.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜனவரி - 2017 | 104.4 |
| ஜனவரி - 2018 | 108.9 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 4.3 | |

உற்பத்தித் துறைகளில் 20 தொழில் நிறுவனங்களில் 11இல் நேர்மறையான வளர்ச்சியைக் காட்டுகின்றன. அதற்கமைய 2017 ஜனவரி மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2018 ஜனவரி மாதத்திற்கான "கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்", "வடிவமைக்கப்பட்ட (Fabricated) உலோக உற்பத்திகள்", மற்றும் "இயந்திர உபகரணங்கள்" என்பனவற்றில் முறையே 38.4%, 24.4% மற்றும் 16.7% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. 2018 ஜனவரி மாதத்திற்கான அடிப்படை உலோக உற்பத்திகள் மற்றும் உணவு உற்பத்தியானது 11.2% மற்றும் 3.5% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

எதிர்மறையாக பதிவாகியுள்ள 9 கைத்தொழில்களில், பின்வரும் கைத்தொழில் துறையில் உள்ளடங்கும் "அடிப்படை மருந்துப் பொருள் உற்பத்திகள்", "வீட்டுத் தளபாடங்கள்" மற்றும் "கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்" முறையே 22.2%, 21.1% மற்றும் 18.8% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2018 ஆண்டின் ஜனவரி மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.